**புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் - 2010**

**-------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**---------------------------**

### 1.1 அபிப்பிராயம்

**-------------------------**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**----------------------------------------------------------------**

#### 1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

**---------------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 03

**---------------------------------------------------------**

(i) நிதிக்கூற்றுக்களுடன் உரிமையாண்மை மாற்றக் கூற்று சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்குகளிற்கான குறிப்புக்களிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் முன்னைய ஆண்டுக்கான ஒப்பீட்டுத் பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இன் படி பயன்படுத்தப்பட்டு வருகின்ற, முன்கொண்டுசென்ற பெறுமதி பூச்சியப் பெறுமதியாக உள்ள நிலையான சொத்துக்கள் காணப்பட்ட போதிலும், அச் சொத்துக்களை மீள விலைமதித்து கணக்கீடு செய்வதற்கோ அல்லது அச் சொத்துக்களின் பெறுமதிகளை கணக்குகளுடன் வெளிக்காட்டுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தலைமை அலுவலகத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொண்டிருந்த ரூபா 479,202 மீண்டெழும் செலவினம் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக பத்தரமுல்லையில் அமைந்துள்ள காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு மேற்கொண்டிருந்த ரூபா 8,503,440 குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

கூட்டுமொத்தம் ரூபா 1,426,936 தொகையான கடன்பட்டோர் மீதியொன்று தொடர்பில் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 22,468,378 தொகையான கடன்பட்டோர் காலப்பகுப்பாய்விற்கமைய 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் பெறுமதி ரூபா 2,189,338 ஆகும். சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 7,793,376 பெறுமதி கொண்ட கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்விற்கமைய 03 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட மீதி ரூபா 285,923 ஆகும்.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

---------------------------------------------------

03 சந்தர்ப்பங்களுடன் தொடர்புபட்ட கூட்டுமொத்தம் ரூபா 7,766,873 பெறுமதியான கொடுக்கல்வாங்கல்களிற்குரிய இருப்புப் பட்டோலைகள், பொருள் மெய்மையாய்வு

அறிக்கைகள், திரும்பிவந்த காசோலைகள் பதிவேடு, கடன்பட்டோர் பட்டோலை போன்ற சான்றுகள் இன்மை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (5)(அ) ஆம் பிரிவு | பணியகத்தின் அகழ்வுகளின் மீது அரசாங்க உதவுதொகை மற்றும் அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்டுகின்ற சுற்றறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விவுக் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணங்கள் கோவை | |
| | (i) நி.பி. இல. 104 | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பணியகத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட 07 வாகனங்களிற்கு சேதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அவை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி. இல. 110 | மீளாய்வாண்டில் இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) நி.பி. இல. 341 | அடிக்கட்டைகள் மற்றும் பதிவேடுகள் தொடர்பில் கட்டுப்பாடொன்று பின்பற்றப்பட வேண்டிய போதிலும் பணியகத்தினால் பயன்படுத்தப்பட்ட அடிக்கட்டைப் புத்தகங்களின் பயன்பாடு மற்றும் களஞ்சியப்படுத்தல் மீது சரியான வழிகாட்டல்கள் முகாமைத்துவத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி. இல. 763 | பணியகத்தில் பயன்படுத்தப்பட்ட அடியிதழ் புத்தகங்கள், ஆனுமதிப்பத்திர வரவுப் புத்தகங்கள், பொருட் கட்டளைப் புத்தகங்கள், எரிபொருள் கோரிக்கைப் புத்தகங்கள் மீது உள்ளகக் கட்டுப்பாடு பலப்படுகின்றவாறு களஞ்சிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி. இல. 1646 | ஒவ்வொரு தாதத்திற்குமான வாகனங்களின் நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்கள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பணியகத்தினால் அதற்கு அமைவுற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) நி.பி. இல. 1647(அ) | வாகனங்கள் மற்றும் அதற்கான உபகரணங்கள் மீது முழுமையான மெய்மையாய்வொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான ஆய்வொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (vii) நி.பி. இல. 134(3) | காலாண்டுக்கொரு முறை சமர்ப்பிக்கப்பட வேண்டிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 4.2.2 ஆம் பிரிவு | கூட்டுத்திட்டம் மற்றும் பாதீட்டுடன் உள்ளபடியான செயன்முன்னேற்றத் தரவுகள் காலத்திற்கேற்ப ஒப்பிட்டு |

| | |
|---|---|
| | மீளாய்வு செய்யப்பட்டு விலகல்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ii) 5.1.3 ஆம் பிரிவு | நாளதுவரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டுக்காக அதன் படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ii) 6.5.3 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களிற்குள் வரைபு ஆண்டறிக்கை மும் மொழிகளிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு முறையும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 469,504,023 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 385,563,862 மிகையுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 83,940,161 வளர்ச்சியொன்று காட்டப்பட்டது.

அரசாங்கப் பங்களிப்பு வருமானம் ரூபா 139.35 மில்லியனாலும் பரிசோதனைக் கட்டணங்கள் ரூபா 42.21 மில்லியனாலும் செயற்திட்ட வருமானம் ரூபா 23.69 மில்லியனாலும் ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் ரூபா 4.82 மில்லியனாலும் வட்டி

வருமானம் ரூபா 19.84 மில்லியனாலும் அதிகரித்திருந்தமையே மேற்படி நிதி விளைவுகளின் வளர்ச்சிக்கு முக்கிய தாக்கம் செலுத்தியிருந்தன.

### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானப் பகுப்பாய்வு

-------------------------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து நோக்குகையில் பணியகத்தின் மொத்த வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 140,418,043 ஆல் அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. அது 22.38% அதரிகரிப்பொன்றாகும்.

(ஆ) செலவினப்பகுப்பாய்வு

--------------------------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து நோக்குகையில் பணியகத்தின் மொத்தச் செலவினம் மீளாய்வாண்டில் ரூபா 56,477,881 ஆல் அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. அது 23.37% அதரிகரிப்பொன்றாகும்.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றுப் பகுப்பாய்வு

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தேறிய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து எழுந்த காசுப்பாய்ச்சல் 2009 ஆம் ஆண்டில் ரூபா 289,933,644 மிகையொன்றானதுடன் 2010 ஆம் ஆண்டில் அதன் அளவு ரூபா 425,974,200 மிகையொன்றாகும். இதன் படி 2010 ஆம் ஆண்டில் தேறிய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து எழுந்த காசுப்பாய்ச்சலின் அதிகரிப்பு ரூபா 136,040,556 ஆகும்.

(ii) முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து எழுந்த 2009 ஆம் ஆண்டிற்கான ரூபா 110,527,671 மிகையான காசுப்பாய்ச்சல் மீளாய்வாண்டில் ரூபா 97,530,969 பற்றாக்குறையாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து எழுந்த காசுப்பாய்ச்சலில் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆண்டில் ரூபா 652,129,369 நிதியீட்டம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 2.1.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 90,091,848 இற்கு 12 கெப் வாகனங்களும் 2009 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ரூபா 27,450,342 மற்றும் ரூபா 33,585,335 செலவில் 10 வாகனங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் வாடகை வாகனங்களிற்காக ரூபா 2,063,234 உம் வாகன திருத்தங்களிற்காக ரூபா 3,717,930 உம் வாகன சேவைக் கட்டணங்களிற்காக ரூபா 1,137,936 உம் செலவிடப்பட்டிருந்தன. பணியகத்தில் காணப்படுகின்ற வாகனங்கள் 10 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த வாகனங்கள் என்றும் அதனால் திருத்தச் செலவினம் அதிகரித்திருந்தது என்றும் பழைய வாகனங்களை விற்பனை செய்து புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு பணியகம் எதிர்பார்த்திருப்பதாகவும் இது சம்பந்தமாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் அகழ்வுகளின் மீதான அரசாங்கப் பங்களிப்பு முற்பணமாக கிடைத்திருந்த ரூபா 99,981,453 தொடர்பில் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அரசாங்கப் பங்களிப்பு அறவிடுகை தொடர்பில் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள 19/02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி விதிக்கப்பட்டுள்ள வட்டிப் பணங்கள் மற்றும் தண்டப்பணங்கள் மீதான செம்மைத் தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் அகழ்வுகள் மீதான அனுமதிப்பத்திரக் கட்டணங்களாக காட்டப்பட்டுள்ள ரூபா 72,860,052 ஆனது அம்முற்பணத் தீர்ப்பனவுகளுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. வெவ்வேறு காரணங்களிற்காகவும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அவை

முற்பணங்களாக மிக நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருப்பதாகவும் இவற்றினை வருமானக் கணக்கிற்கு எடுப்பதற்குள்ள இயலுமை தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்பட உள்ளதாகவும் தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

### 2.2.1 செயலாற்றல்

-----------------------

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆண்டின் போது அடையப்பட வேண்டிய நடவடிக்கைகளின் அடைவுகள் மீதான பௌதீக மற்றும் நிதிசார் செயன்முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது.

(i) 92 மற்றும் 46 ஆம் இலக்க பட வரைபு மற்றும் அச்சிடலிற்காக முறையே ரூபா 200,000 மற்றும் ரூபா 750,000 தொகையும் கொழும்பு உப தேசப்படத்திற்காக ரூபா 730,000 தொகையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 07 நடவடிக்கைகளிற்காக அங்கீகரித்த வரம்பிற்கும் மேலாக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 3,257,000 ஆகும்.

(iii) 40% தொடக்கம் 93% வரை ஏற்பாடுகள் சேமிப்பாகியிருந்த நடவடிக்கைகளின் எண்ணிக்கை 08 ஆக காணப்பட்டதுடன் அவற்றின் சேமிப்பு ரூபா 6,927,000 ஆகும்.

(iv) வேலை தொடங்கப்பட்டிருந்த பட வரைதல் மற்றும் அச்சிடல் செயற்பாடுகளின் 03 சந்தர்ப்பங்களின் போதான செயன்முன்னேற்றம் 25% இற்கும் குறைவாக காணப்பட்டன.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு வரை ரூபா 56,805,031 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த களஞ்சியத் தொகுதியின் திறப்புப் பணியினை ஒப்படைப்பதற்கு களஞ்சியக் காப்பாளர் ஒருவரை நியமிக்காமையால் களஞ்சியப் பொருட்களை இராக்கைப்படுத்தல், களஞ்சிய இலக்கமிடுதல், வகைப்படுத்தல் பலவீனமான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை நிதி ஆணைக்குழுவினால் 2010 மே 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட SP/SB/03/10 ஆம் இலக்க சுற்றுநிருபத்தினால் அரசாங்க நிறுவனங்களில் e-Government Policy அமுலாக்கப்படுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை பணியகத்தினால் அதன் பிரகாரம் இணங்கி ஒழுகாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், பணியகத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவினை செயற்பாடுடையதாக தாபித்து பதவியணியினரிற்கு உரிய பொறுப்புக்களை ஒப்படைப்பதுடன், தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களிற்கிடையே உரியபடி வலைப்பின்னல் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கவுமில்லை.

(இ) பணியகத்தினால் தலைமை அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் நோக்கில் 2007 ஆம் ஆண்டில் ஒருகொடவத்த பிரதேசத்தில் காணியொன்றைக் கொள்வனவு செய்தல் மற்றும் அதில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டும் வைபவத்திற்காக ரூபா 130,476,703 செலவிடப்பட்டிருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் கணக்காய்வுத் திகதியான 2011 ஜுன் 30 வரைக்கும் கிடைத்திருக்கவில்லை.

1993 ஆம் ஆண்டிலிருந்து பிரதான அலுவலகம் அமைந்துள்ள சேனநாயக்க கட்டிடத்தில் தொடர்ந்தும் இருக்க வேண்டி ஏற்பட்டிருந்தமையால் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை ரூபா 188 மில்லியனும் (2008 நவம்பர் 17 ஆந் திகதிய GM/AD/10-1 கடிதத்தின் படி) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா 29 மில்லியனும் கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

மேலும் 2010 ஆம் ஆண்டில் பத்தரமுல்லை பிரதேசத்தில் முப்பது ஆண்டு குத்தகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து மற்றுமோர் காணியினை கொள்வனவு செவய்வதற்காக ரூபா 55,241,300 செலவிடப்பட்டிருந்த

போதிலும், 2011 ஜுன் 30 ஆந் திகதி வரை அதில் எவ்வித நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி விடயங்களைக் கருத்திற் கொள்கையில் தலைமை அலுவலகத்திற்கு கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களிலும் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 185,718,003 ஆகும்.

### 2.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணியகத்தினால் 1993 ஆம் ஆண்டிலிருந்து அனுபவித்து வந்திருந்த வெரல்லவத்த காணியில் 2007 ஆம் ஆண்டிலிருந்து களஞ்சியத் தொகுதியொன்றை / பாதுகாப்புக் கூடமொன்றை நிர்மாணித்தல் தொடங்கப்பட்டு மீளாய்வாண்டு வரை ரூபா 56,805,031 செலவிட்டு நிர்மாணம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அக் காணிக்கு உரித்தான நிலப்பரப்பில் 80% ஆன அளவு பணியகத்தினால் தொடர்புடைய திட்டத்தினை நடைமுறைப் படுத்தாமையால் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) களஞ்சியத் தொகுதியின் பௌதீகப் பரிசோதனையில் இரண்டு மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் பயன்படுத்தாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ் இயந்திரங்கள் தொடர்பான விபரமான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அவ் இயந்திரங்களைப் பயன்படுத்தாமைக்கான காரணங்கள் மீதான உறுதிப்பாடொன்றை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.2.4 பதவியணி முகாமைத்துவம் மற்றும் கிரயம்

| பதவி | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உயர்மட்ட முகாமைத்துவம் | 87 | 77 | 10 |
| இடைமட்ட முகாமைத்துவம் | 16 | 08 | 08 |
| செயற்பாட்டு முகாமைத்துவம் | 278 | 168 | 110 |
| | 381 | 253 | 128 |

(அ) 2010 திசெம்பர் 31 இல் அதிகாரசபையின் அங்கீகரித்த பதவியணி மேலே உள்ளவாறு 381 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 253 ஆகும். 128 பதவிகளிற்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களை நிரப்பாது பணியகத்தினால் புவிச்சரிதவியலாளர், எழுதுவினைஞர், அகழ்வு பொறியியலாளர், சாரதிகள், வெளிக்கள ஆய்வு உதவியாளர்கள், கொள்வனவு உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், தொழிலாளர் பதவிகளிற்கு 12% பெறுமதிசேர் வரி அடங்கலாக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டிருந்த சேவைக்காக மீளாய்வாண்டில் ரூபா 16,532,071 செலுத்தப்பட்டிருந்தது.

வாடகை அடிப்படையில் சேர்த்துக்கொண்டிருந்த ஊழியர்கள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | எண்ணிக்கை.்.பயன்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | 2010 ஆம் ஆண்டிற்கு செலுத்திய தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| புவிச்சரிதவியலாளர் | 02 | 1,125,795 |
| அகழ்வு பொறியியலாளர் | 48 | 2,547,243 |
| எழுதுவினைஞர் | 120 | 2,510,055 |
| வெளிக்கள ஆய்வு உதவியாளர்கள் | 214 | 5,944,533 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 30 | 726,539 |
| கொள்வனவு உத்தியோகத்தர்கள் | 01 | 280,000 |
| சாரதிகள் | 03 | 695,867 |
| அலுவலக உதவியாளர்கள் | 03 | 489,244 |
| தொழிலாளர் | 02 | 410,333 |
| 12% பெறுமதிசேர் வரி | | 1,802,462 |
| மொத்தம் | 423 | 16,532,071 |

(ஆ) தாபன விதிக்கோவையின் vi ஆம் அத்தியாயத்தின் 2:10 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பணியக உத்தியோகத்தர்களின் இடமாற்றம், சம்பள ஏற்றங்கள், சம்பள அதிகரிப்பை வழங்குதல், பதவிநீக்கம், சேவையிலிருந்து

விடுவித்தல், பதவிவிலக்கல், ஓய்வுபெறல் போன்ற பதவியணித் தகவல்களுடன் தொடர்புடைய கடிதங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படாமையால் உத்தியோகத்தர்கள் சம்பந்தமான நிர்வாப் பணிகள் சுற்றறிக்கைகள் மற்றும் தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைய இடம்பெற்றனவா என்பதனைக் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(இ) 2010 மார்ச் 23 ஆந் திகதி இடம்பெற்ற 203 ஆவது முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தொலைநோக்கு மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவகத்தின் 5 ஆம் மட்ட (NVQ 5) தகைமையைக் கொண்ட நபர் ஒருவரை போக்குவரத்து உத்தியோகத்தராக சேர்த்துக் கொள்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஜனவரி 11 ஆந் திகதியன்று அப் பதவி பதில் கடமை நிலையில் காணப்பட்டது. மேலும் அப் பணிக்காக ரூபா 10,000 மாதாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் போக்குவரத்து ஆலோசகர் ஒருவர் பணியகத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

(ஈ) பணியகத்தின் நிதி முகாமையாளர் பதவிக்காக தகைமை கொண்ட ஒருவரை சேர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தகைமைகளிற்கு முரணாக 2010 ஆகஸ்ட் 02 ஆந் திகதி தொடக்கம் மேற்படி பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டில் பணியகத்தின் பதவியணியினை மறுசீரமைத்தல் மற்றும் செயலாற்றல் மதிப்பீட்டுப் பணிக்காக (Restructuring and Perfomance Apprisal of GSMB Employees) மதியுரைஞர் ஒருவர் சேர்க்கப்பட்டு இரண்டு சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 460,000 செலுத்தப்பட்டிருந்தது. அவரினால் அது தொடர்பான அறிக்கை வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ் அறிக்கையில் சிக்கலான நிலைமைகள் உள்ளமையால் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் 2009 ஜூலை 08 ஆந் திகதிய பீஈடீ/பீயூ சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2006 செப்தம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பணியகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையொன்றை அங்கீகரித்துக் கொண்டு மேற்படி சுற்றறிக்கைகளின் பிரகாரம் தொடர்புடைய சம்பள அளவுத்திட்டங்களில் வைப்பதற்கு 2011 ஜூன் 30 வரைக்கும் பணியகத்தின் முகாமைத்தவம் தவறியிருந்தது.

(ஊ) பணியகத்தின் அங்கீகரித்த பதவியணியில் காணப்படும் பணத்தினைக் கையாழும் இரண்டு பதவிகளிற்கான வெற்றிடங்களை உயர் முகாமைத்துவம் நிரப்பாமை காரணமாக சாதாரண இரண்டு எழுதுவினைஞர்கள் அக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் பணத்தினைக் கையால்தல் தொடர்பான பொறுப்பினை உரியவாறு ஒப்படைப்பதற்குள்ள இயலுமை வரையறுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) பதவியணிக் கிரயம்

--------------------------------

| | **2010 ஆம் ஆண்டு** | **2009 ஆம் ஆண்டு** | **அதிகரிப்பு/ (குறைவு)** | **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சதவீதமாக அதிகரிப்பு/((குறைவு)** |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| சம்பளம் கூலிகள் மற்றும் படிகள் | 90,872,914 | 76,613,407 | 14,259,507 | 18.61% |
| ஊழியர் சேமலாப நிதியம் | 6,690,502 | 6,151,856 | 538,646 | 8.75% |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 1,672,626 | 1,533,655 | 138,970 | 9.06% |
| மேலதிகநேரப் படி | 7,549,958 | 6,380,356 | 1,169,602 | 18.33% |
| பணிக்கொடை ஒதுக்கம் | 3,030,146 | 6,828,221 | (3,798,075) | (55%) |
| ஊக்குவிப்புப் படி | 2,236,667 | 3,380,262 | 1,143,595 | 33% |

### 2.2.5 வாகனப் பாவனை

------------------------------------

மீளாய்வாண்டில் 38 வாகனங்கள் கொண்ட வாகனத் தொகுதியொன்றும் அதற்காக பணியகத்திற்குச் சொந்தமான 28 சாரதிகளும் விஞ்ஞான ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தொழில்நுட்பச் சேவைகள் கம்பனியிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட 09 சாரதிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(அ) சாரதிகளை வாகனங்களிற்காக இணைப்புச் செய்கையில் முறையான வேலைத்திட்டமொன்று பணியகத்தினால் பின்பற்றப்படாமையால் வாகனங்கள் தொடர்பான பொறுப்பு சாரதிகளிடமிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே வாகன விபத்துக்கள் இடம்பெறும் போக்கு அதிகரித்திருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்காக அதிகரித்திருந்ததுடன் KL - 1021 ஆம் இலக்க வாகனம் 07 மாதங்களில் இரண்டு தடவைகள் விபத்தில் சிக்கியிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் பணியகத்திற்குச் சொந்தமான 07 வாகனங்கள் 10 சந்தர்ப்பங்களில் விபத்துக்களில் சிக்குண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. உரிய பணிகளை ஒப்படைக்காமை காரணமாக போக்குவரத்துத் தொகுதி இடர் நிலைமைக்குள் சிக்குண்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பணியகத்தினால் சாரதிப் பதவிக்காக ஊழியர்களை சேர்த்துக் கொள்கையில் குறித்துரைத்த நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) பணியகத்தின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவியானது 2008 ஜுன் தொடக்கம் 2 ½ ஆண்டுகளிற்கும் மேலாக இது வரை வெற்றிடம் நிரப்பப்படாது ஒப்பந்த அடிப்படையில் போக்குவரத்து ஆலோசகர் ஒருவர் வெளியிலிருந்து சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பணியகத்தின் செயற்பாடுகளிற்காக பயன்படுத்திக் கொள்ளப் படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் படி அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவின வரம்பினை மீறி முறையான அங்கீகாரமின்றி 4 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் ரூபா 89,587,722 செலவினமொன்று பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) ரூபா 25,410,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் எவ்விதச் செலவினங்களையும் செய்யாதிருந்த 6 சந்தர்ப்பங்கள் மூலதனச் செலவினத்தின் கீழ் அவதானிக்கப்பட்டது.

(iii) 10 செலவின விடயங்களிற்கு ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளாமல் ரூபா 99,313,244 தொகையொன்று மூலதனச் செலவினமாக செய்யப்பட்டிருந்தது.

(iv) 03 வருமான விடயங்களின் கீழான மதிப்பிடப்பட்ட வருமான எல்லை ரூபா 210,800,000 ஆனதுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 13,190,790 ஆனமையால் ரூபா 197,609,210 இனால் மதிப்பிடப்பட்ட வருமானத்தினை அணுக முடியாது போயிருந்தது. வங்கி வட்டி வீதம் குறைந்தமையே வருமானம் குறைந்தமைக்கு காரணமாகும் என தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீடு

(இ) முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்தல்

(ஈ) நிலையான சொத்துக்கள்

(உ) பதிவேடுகளைப் பேணுதல்

(ஊ) வாடகை அடிப்படையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

(எ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஏ) வாகனப் பாவனை

(ஒ) மாகாண அலுவலகங்களின் நிர்வாகம்

(ஓ) அரசாங்கப் பங்களிப்பு முற்பணம்

(ஐ) அகழ்வுகளிற்கான அனுமதிப்பத்திர முற்பணம்